# திருப்பத்தூர் மாவட்டம் – முதல் திருப்புதல் தேர்வு – ஜனவரி - 2025

## 12 ஆம் வகுப்பு – வேதியியல் பாடகுறிப்பு

### பகுதி – I 15 x 1 = 15

| கே. எண் | விடை | கே. எண் | விடை |
|---|---|---|---|
| 1 | அ) Al | 9 | ஆ) அதிக அமிலத்தன்மை கொண்டது |
| 2 | அ) உலோக போரைடுகள் | 10 | அ) I மற்றும் IV |
| 3 | இ) காமா | 11 | அ) சிலிக்கா ஜெல் |
| 4 | ஈ) mere attempt | 12 | அ) டை மெத்தில் சல்பாக்ஸைடு (DMSO) |
| 5 | அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமாகும் | 13 | அ) ஃபார்மிக் அமிலம் |
| 6 | ஆ) ஆக்டினைடுகள் | 14 | ஆ) நீல நிற கரைசல் |
| 7 | ஆ) கிளர்வு ஆற்றல் | 15 | ஈ) டெட்ரா புளுரோ எத்திலீன் |
| 8 | ஈ) Kr | | |

### பகுதி - II

**எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 24 கட்டாய வினா. 6 x 2 = 12**

| | | | |
|---|---|---|---|
| 16 | **பின்வரும் விதியை பூர்த்தி செய்க. $B_2H_6 + CH_3OH \longrightarrow$ ?**<br>$B_2H_6 + 6\ CH_3OH \longrightarrow 2\ B(OCH)_3 + 6\ H_2$ | 2 | 2 |
| 17 | **வெண்பாஸ்பரஸை சிவப்பு பாஸ்பரஸாக எவ்வாறு மாற்றுவாய்?**<br>காற்று மற்றும் ஒளியில்லா சூழ்நிலையில் 420 °C வெப்பநிலைக்கு வெப்பப்படுத்துவதன் மூலம் வெண்பாஸ்பரஸை சிவப்பு பாஸ்பரஸாக மாற்ற இயலும். | 2 | 2 |
| 18 | **அணைவுச் சேர்மங்களின் பயன்பாடுகளில் ஏதேனும் இரண்டு தருக.**<br>**மருத்துவப் பயன்:**<br>• Ca-EDTA அணைவு காரியம் மற்றும் கதிர்வீச்சு நச்சினை நீக்க பயன்படுகிறது<br>• சிஸ் - பிளாட்டினம் - புற்றுநோய்க்கட்டி எதிர் மருந்தாக பயன்படுகிறது.<br>**(அல்லது)**<br>**உயிரியல் முக்கியத்துவம்:**<br>• வைட்டமின் B-12 (சயனோ கோபாலமீன்) – (கோபால்ட் அயனி)<br>• ஹீமோகுளோபின் (RCB) – (பெரஸ் அயனி)<br>• குளோரோபில் – (மக்னீசியம் அயனி)<br>**(அல்லது) ஏதேனும் இரண்டு பயன்கள்** | 2 | 2 |

Prepared by Dr.R.Karthic, PG Assistant (Chemistry), GHSS – Vallipattu

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

19 **லூயி அமிலங்கள் மற்றும் காரங்கள் இடையேயான வேறுபாடுகள் யாது? (ஏதேனும் இரண்டு)** — 2 — 2

| | **லூயி அமிலங்கள்** | **லூயி காரங்கள்** |
|---|---|---|
| 1 | எலக்ட்ரான் குறை மூலக்கூறுகள் எ.கா. $BF_3$, $AlCl_3$ | தனித்த எலக்ட்ரான் இரட்டைகளை கொண்ட மூலக்கூறுகள். எ.கா. $NH_3$, $H_2O$ |
| 2 | உலோக அயனிகள். எ.கா. $Fe^{2+}$ | எதிரயனிகள். எ.கா. $F^-$ |
| 3 | கார்பன் நேரயனி எ.கா. $(CH_3)_3C^+$ | கார்பன் எதிரயனி. எ.கா. $CH_3^-$ |
| 4 | முனைவுற்ற இரட்டை பிணைப்பு கொண்ட மூலக்கூறுகள். எ.கா. $CO_2$ | கார்பன் - கார்பன் பல்பிணைப்பு கொண்ட மூலக்கூறுகள். எ.கா.CH=CH |
| 5 | எண்மத்தை நீட்டிக்கொள்ளும் மைய அணுவை கொண்ட மூலக்கூறுகள் எ.கா. $SiF_4$ | உலோக ஆக்சைடுகள் எ.கா. CaO |

20 **மின்னாற்பகுத்தல் பற்றிய ஃபாரடே இரண்டாம் விதியை கூறுக?** — 2 — 2

ஒரே அளவு மின்னோட்டத்தை வெவ்வேறு மின்பகுளிக் கரைசல்களின் வழியே செலுத்தும் போது, மின்முனைகளில் விடுவிக்கப்படும் பொருளின் அளவானது அவற்றின் மின்வேதிச் சமானங்களுக்கு நேர்விகிதத்தில் இருக்கும்.

**(அல்லது)** $m \propto Z$ — 1

21 **நுண்வடிகட்டல் முறையின் மூலம் கூழ்மங்களை எவ்வாறு தூய்மைப்படுத்துவாய்?** — 2 — 2

மின்பகுளிகளிடமிருந்து கூழ்மத் துகள்களை நுண்வடித்தாள் வழியாக வடிகட்டி நீக்கும் செயல்முறை. கொல்லோடியன் கொண்டு தயாரிக்கப்படும் வடிதாள் கொண்டு கூழ்மங்களை வடிகட்டும் போது, கூழ்ம்ழ்த்துகள் வடிதாளிலேயே தங்குகின்றன.

22 **ஈத்தைனிலிருந்து அசிட்டால்டிஹைடு எவ்வாறு தயாரிப்பாய்?** — 2 — 2



ஈத்தைன் அசிட்டால்டிஹைடு

**(அல்லது) விளக்கம் மட்டும்** — 1

23 **ஒடுக்கும் மற்றும் ஒடுக்கா சர்க்கரைக்கு எடுத்துக்காட்டு தருக.** — 2 — 2

**1. ஒடுக்கும் சர்க்கரைகள்:** எ.கா. குளுக்கோஸ், லாக்டோஸ், மால்டோஸ்

**2. ஒடுக்கா சர்க்கரைகள்:** எ.கா. சுக்ரோஸ்

24 **அரோமேட்டிக் அமீன்கள் அம்மோனியாவைக் காட்டிலும் குறைவான காரத்தன்மை கொண்டுள்ளது. நியாயப்படுத்துக?** — 2 — 2

அனிலீனில் $NH_2$ தொகுதியானது பென்சீன் வளையத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. அனிலீனின் நைட்ரஜன் அணு மீதான தனித்த இரட்டை எலக்ட்ரான் பென்சீன் வளையத்தினுள் உள்ளடங்காத் தன்மையினைப் பெற்றுள்ளது. எனவே, புரோட்டானேற்றத்திற்கு தனித்த எலக்ட்ரான் கிடைக்கக்கூடிய வாய்ப்பு குறைகிறது. இதன் விளைவாக அரோமேட்டிக் அமீன்கள் (அனிலீன்), அம்மோனியாவைக் ($NH_3$) காட்டிலும் குறைவான காரத்தன்மையைப் பெறுகின்றது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - III

**எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி. வினா எண். 33 கட்டாய வினா. 6 x 3 = 18**

| | | | |
|---|---|---|---|
| 25 | **பொட்டாஷ் படிகாரத்தை எவ்வாறு தயாரிப்பாய்?**<br>$K_2SO_4.Al_2(SO_4)_3.4Al(OH)_3 + 6H_2SO_4 \longrightarrow K_2SO_4 + 3Al_2(SO_4)_3 + 12H_2O$<br>$K_2SO_4 + Al_2(SO_4)_3 + 24H_2O \longrightarrow K_2SO_4.Al_2(SO_4)_3.24H_2O$<br>**(அல்லது)** விளக்கம் மட்டும் | 1½<br>1½<br>1 | 3 |
| 26 | **லாந்தனாய்டு குறுக்கம் விவரி?**<br>Ce முதல் Lu வரை செல்லும் போது அவற்றின் அயனி ஆரம் குறைகிறது. இதுவே லாந்தனைடு குறுக்கம் எனப்படும்.<br>**லாந்தனாய்டு குறுக்கம் காரணங்கள்**<br>1. அணுக்கரு மின்சுமை அதிகரிக்கிறது<br>2. 4f எலக்ட்ரான்களின் திரை மறைப்பு விளைவு குறைவு | 3 | 3 |
| 27 | **நீரேற்ற மாற்றியங்கள் என்றால் என்ன? ஓர் உதாரணத்துடன் விளக்குக.**<br>படிக அணுக்கோவைத் தளத்தில் தனித்த நிலையில் காணப்படும் நீர் மூலக்கூறுகள், அணைவு உட்பொருளில் உள்ள ஈனிகளுடன் பரிமாற்றம் அடைவதால் நீரேற்ற மாற்றியங்கள் உருவாகின்றன. எ.கா. $CrCl_3.6H_2O$<br>$[Cr(H_2O)_6]Cl_3$ — ஊதா நிறம் — கரைசலில் 3 $Cl^-$ அயனிகளை தருகிறது.<br>$[Cr(H_2O)_5Cl]Cl_2.H_2O$ — வெளிர் பச்சை நிறம் — கரைசலில் 2 $Cl^-$ அயனிகளை தருகிறது.<br>$[Cr(H_2O)_4Cl_2]Cl.2H_2O$ — அடர் பச்சை நிறம் — கரைசலில் 1 $Cl^-$ அயனிகளை தருகிறது. | 3 | 3 |
| 28 | **அர்ஹீனியஸ் சமன்பாட்டினை எழுதி அதில் இடம் பெற்றுள்ளனவற்றை விவரி.**<br>$k = Ae^{-Ea/RT}$<br>k = வினைவேக மாறிலி<br>A = அதிர்வெண் காரணி,<br>R = வாயு மாறிலி,<br>$E_a$ = கிளர்வு ஆற்றல்,<br>T = வெப்பநிலை | 1<br>2 | 3 |
| 29 | **பொது அயனி விளைவை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.**<br>வலிமை குறைந்த மின்பகுளியுடன், ஒரு பொது அயனியை கொண்டுள்ள உப்பை சேர்க்கும் போது, அந்த வலிமை குறைந்த மின்பகுளியின் பிரிகை வீதம் குறைகிறது.<br>**எ.கா:** அசிட்டிக் அமிலத்துடன் சோடியம் அசிட்டேட்டை சேர்க்கும் போது அசிட்டிக் அமிலத்தின் பிரிகை வீதம் குறைகிறது. | 2<br>1 | 3 |
| 30 | **மின்னாற் பிரிகை முறை:**<br>பனிக்கட்டிகளால் சூழப்பட்ட நீரினுள் வைக்கப்பட்டுள்ள பிளாட்டினம் மின் முனைகளுக்கிடையே ஒரு மின்வில் உருவாக்கப்பட்டு உலோகத்தை ஆவியாகிறது. இது உடனடியாக குளிர்ந்து, கூழ்ம கரைசலை உருவாக்குகிறது. இந்த முறையில் கோல்ட், பிளாட்டினம் கூழ்மங்கள் தயாரிக்கப்படுகிறது. | 3 | 3 |

Prepared by Dr.R.Karthic, PG Assistant (Chemistry), GHSS – Vallipattu

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**31 காட்டர்மான் - கூச் வினையை விவரி.**




(அல்லது) விளக்கம் மட்டும்

மதிப்பெண்: 3 / 1 — மொத்தம்: 3

**32 DNA மற்றும் RNA க்கு இடையே உள்ள ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுது**

| | DNA | RNA |
|---|---|---|
| 1 | இது உட்கரு, மைட்டோகாண்ட்ரியா மற்றும் பசுங்கணிகங்களில் காணப்படும் | இது சைட்டோபிளாசம், உட்கருதிரள் மற்றும் ரிபோசோம்களில் காணப்படும் |
| 2 | டீஆக்ஸிரிபோஸ் சர்க்கரை கொண்டது | ரிபோஸ் சர்க்கரை கொண்டது |
| 3 | வாழ்காலம் அதிகம் | வாழ்காலம் குறைவு |
| 4 | நிலைப்புத்தன்மை உடையது | நிலைப்புத்தன்மை அற்றது |
| 5 | இரட்டை இழை மூலக்கூறுகள் | ஒற்றை இழை மூலக்கூறுகள் |
| 6 | கார இணைகள் A = T மற்றும் G ≡ C | கார இணைகள் A = U மற்றும் C ≡ G |
| 7 | தானாகவே இரட்டிப்படைதல் நிகழ்த்தும் | தானாகவே இரட்டிப்படைய முடியாது |

மதிப்பெண்: 3 x 1 — மொத்தம்: 3

**33** $C_6H_5NO_2 \xrightarrow{Fe\ /\ HCl} \textbf{A} \xrightarrow[273K]{HNO_2} \textbf{B} \xrightarrow{C_6H_5OH} \textbf{C}$

**A, B மற்றும் C சேர்மங்களைக் கண்டறிக.**

$C_6H_5NO_2 \xrightarrow{Fe\ /\ HCl} C_6H_5NH_2 \xrightarrow[273K]{HNO_2} C_6H_5N_2^+Cl^- \xrightarrow{C_6H_5OH} C_6H_6 + N_2 + CH_3CHO + HCl$

(அல்லது) A B C

A = அனிலீன் (அல்லது) $C_6H_5NH_2$

B = பென்சீன் டையசோனியம் குளோரைடு (அல்லது) $C_6H_5N_2^+Cl^-$

C = பென்சீன் (அல்லது) $C_6H_6$

மதிப்பெண்: 3 / 3 x 1 — மொத்தம்: 3

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 10**

**34 அ) i) தூய உலோகங்களை தாதுக்களிலிருந்து பிரித்தெடுக்கும் பல்வேறு படிநிலைகள் யாது? (3)**

1. தாதுக்களை அடர்பித்தல் — 1
2. பண்படா உலோகத்தை பிரித்தெடுத்தல் — 1
3. பண்படா உலோகத்தை தூய்மையாக்குதல் — 1

**ii) படிகாரத்தின் பயன்கள் குறிப்பிடுக. (2)**

1. நீர் சுத்திகரிப்பு 2. நீர் ஒட்டா ஆடைகள் 3. குருதி தடுப்பான்
4. சாயமிடுதல், காகிதம் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பயன்படுகிறது.

மதிப்பெண்: 2 x 1 — மொத்தம்: 5



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**(அல்லது) ஆ) i) சல்பேட் உறுப்பை கண்டறியும் சோதனை ஒன்றை கூறு. (2)**

சல்பேட்டுகளின் நீர் கரைசல் பேரியம் குளோரைடு கரைசலுடன் சேர்ந்து வெண்மை நிற பேரியம் சல்பேட் வீழ்படிவைத் தருகிறது. இதனை லெட் அசிட்டேட் கரைசலைக் கொண்டும் கண்டறியலாம். இங்கு வெண்மை நிற லெட் சல்பேட் வீழ்படிவாகிறது. 2

**(அல்லது)**

$$BaCl_2 + H_2SO_4 \longrightarrow BaSO_4\downarrow + 2HCl$$

பேரியம் சல்பேட்
வெண்மை நிற வீழ்படிவு

$$(CH_3COO)_2Pb + H_2SO_4 \longrightarrow PbSO_4\downarrow + 2CH_3COOH$$

லெட் சல்பேட்
வெண்மை நிற வீழ்படிவு

2

**ii) இடைநிலை தனிமங்கள் அதிக அளவில் அணைவு சேர்மங்களை உருவாக்குவது ஏன்? (3)**

1. சிறிய உருவ அளவு,
2. அதிக மின்சுமை
3. காலியான குறைந்த ஆற்றலுடைய d ஆர்பிட்டால்களை கொண்டுள்ளது.

3

35

**அ) i) லாந்தனைடுகள் மற்றும் ஆக்டினைடுகளை ஒப்பிடுக. (5)**

| | லாந்தனைடுகள் | ஆக்டினைடுகள் |
|---|---|---|
| 1 | வேறுபடுத்தும் எலக்ட்ரான் 4f ஆர்பிட்டாலில் சேர்கிறது | வேறுபடுத்தும் எலக்ட்ரான் 5f ஆர்பிட்டாலில் சேர்கிறது |
| 2 | 4f ஆர்பிட்டாலில் பிணைப்பு ஆற்றல் அதிகம் | 5f ஆர்பிட்டாலில் பிணைப்பு ஆற்றல் குறைவு |
| 3 | ஆக்சோ நேரயனியை உருவாக்குவது இல்லை | ஆக்சோ நேரயனிகளை உருவாக்குகிறது. எ.கா: $UO_2^{2+}$, $NPO_2^{2+}$. |
| 4 | பெரும்பாலானவை நிறமற்றவை | பெரும்பாலானவை நிறமுள்ளவை |
| 5 | அணைவுச் சேர்மங்களை உருவாக்கும் தன்மை குறைவு | அணைவு சேர்மங்களை உருவாக்கும் தன்மை அதிகம் |
| 6 | +3 ஆக்சிஜனேற்ற நிலையுடன் +2 மற்றும் +4 பெற்றுள்ளன. | +3 ஆக்சிஜனேற்ற நிலையுடன் +4, +5, +6 மற்றும் +7 பெற்றுள்ளன. |

5 x 1 — 5

**(அல்லது) ஆ) $K_4[Mn(CN)_6]$ அணைவின் மைய உலோக அயனியின் ஆக்ஸிஜனேற்ற நிலை, அணைவு எண், ஈனியின் தன்மை, காந்த பண்பு மற்றும் எண்முகி படிக புலத்தில் எலக்ட்ரான் அமைப்பு ஆகியவற்றை தருக. (5)**

i) உலோக அயனியின் ஆக்ஸிஜனேற்ற நிலை = +2

ii) அணைவு எண் = 6

iii) ஈனியின் தன்மை = வலிமை மிகுந்த ஈனி ($CN^-$)

iv) காந்த பண்பு = பாரா காந்தத்தன்மை (ஒரு தனித்த எலக்ட்ரான்)

v) எண்முகி படிக புலத்தில் எலக்ட்ரான் அமைப்பு = தாழ்சிழற்சி: $t_{2g}^5\ e_g^0$

5 X 1

36

**அ) i) ஏழு வகையான அலகுகூடுகளின் பெயர்களை தருக. (3)**

1. கனச்சதுரம், 2. சாய்சதுரம், 3. அறுமுக வடிவம், 4. நான்முக வடிவம், 5. ஆர்த்தோ சாய்சதுரம், 6. ஒற்றைச்சரிவு வடிவம், 7. முச்சரிவு வடிவம் 3 — 5

Prepared by Dr.R.Karthic, PG Assistant (Chemistry), GHSS – Vallipattu

www.Padasalai.Net

**ii) பின்வரும் வினைகளின் வினை வகையை கண்டறிக? (2)**

**1. இரும்பு துருப்பிடித்தல்** = முதல் வகை ½

**2. $_{92}U^{238}$ ன் கதிரியக்க சிதைவு** = முதல் வகை ½

**3. 2A + 3B ⟶ விளைபொருள்; வினைவேகம் = k $[A]^{1/2} [B]^2$** $= \frac{1}{2} + 2 = \frac{1+4}{2} = \frac{5}{2}$ 1

**(அல்லது) ஆ) i) வலிமை மிகு அமிலம் மற்றும் வலிமை குறைந்த காரத்திலிருந்து உருவாகும் உப்பின் நீராற்பகுத்தல் மாறிலி மற்றும் நீராற்பகுத்தல் வீதம் ஆகியவற்றிற்கான சமன்பாடுகளை தருவி. (5)**

ஒரு வலிமை மிகு அமிலம் மற்றும் வலிமை குறைந்த காரம் ஆகியவற்றிற்கு இடையேயான சமநிலை வினையை கருதுவோம்

$$HCl_{(aq)} + NH_4OH_{(aq)} \rightleftharpoons NH_4Cl_{(aq)} + H_2O_{(l)}$$ 1

$$NH_4Cl_{(aq)} \longrightarrow NH_4^+{}_{(aq)} + Cl^-{}_{(aq)}$$

$NH_4^+$ அயனியானது, $NH_4OH$ எனும் வலிமை குறைந்த காரத்தின் இணை அமிலமாகும். மேலும், இது நீரிலிருந்து உருவாக்கப்பட்ட $OH^-$ அயனியுடன் வினைபுரிந்து அயனியுறா $NH_4OH$ காரத்தை உருவாக்கும்.

$$NH_4^+{}_{(aq)} + H_2O_{(l)} \rightleftharpoons NH_4OH_{(aq)} + H^+{}_{(aq)}$$ 1

இத்தகைய திறனை $Cl^-$ அயனி பெறவில்லை, எனவே $[H^+] > [OH^-]$; கரைசலானது அமிலத் தன்மையை பெற்றுள்ளது. மேலும் அதன் pH மதிப்பு 7 ஐவிட குறைவு.

$$K_h = \frac{[NH_4OH][H^+]}{[NH_4^+]}$$

வலிமை குறைந்த காரம் $NH_4OH$ன் பிரிகை சமநிலை

$$NH_4OH_{(aq)} \rightleftharpoons NH_4^+{}_{(aq)} + OH^-{}_{(l)}$$

$$K_b = \frac{[NH_4^+][OH^-]}{[NH_4OH]}$$

நீராற்பகுத்தல் வினைக்கான சமநிலை மாறிலிக்கும் ($K_h$), மற்றும் காரத்தின் பிரிகை மாறிலிக்கும் ($K_b$) இடையேயுள்ள தொடர்பு.

$$K_h \times K_b = \frac{[NH_4OH][H^+]}{[NH_4^+]} \times \frac{[NH_4^+][OH^-]}{[NH_4OH]}$$ 1

$$K_h . K_b = [H^+][OH^-]$$

$$K_h . K_b = K_w$$

$$K_h = \frac{K_w}{k_b}$$

ஆஸ்வால்ட் நீர்த்தல் விதியில் பெறப்பட்டதைப் போல், $K_h$ மதிப்பு,

$K_h = h^2C$ (அல்லது) $h^2 = \frac{K_h}{C}$ (அல்லது) $h = \sqrt{\frac{K_h}{C}}$ (அல்லது) $h = \sqrt{\frac{K_W}{K_b.C}}$

எனவே, $[H^+] = \sqrt{K_h.C}$ (அல்லது) $[H^+] = \sqrt{\frac{K_w.C}{K_b}}$ 1

கரைசலின் pH: $pH = -\log[H^+] = -\log\left[\frac{K_w.C}{K_b}\right]^{\frac{1}{2}} = -\frac{1}{2}\log K_w - \frac{1}{2}\log C + \frac{1}{2}\log K_b$

$$\boxed{pH = 7 - \frac{1}{2}pK_b - \frac{1}{2}\log C}$$ 1

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 37 | **அ) பாதரச பட்டன் மின்சேமிப்புகலம் பற்றி விவரி? (5)**<br>**நேர்மின்முனை:** பாதரசத்துடன் இரசக்கலவையாக்கப்பட்ட ஜிங்க்<br>**எதிர்மின்முனை:** கிராஃபைட்டுடன் கலக்கப்பட்ட HgO<br>**மின்பகுளி:** KOH மற்றும் ZnO கலந்த பசை<br>**நேர்மின்முனையில்:** $Zn_{(S)} + 2OH^-_{(aq)} \longrightarrow ZnO_{(S)} + H_2O_{(l)} + 2e^-$<br>**எதிர்மின்முனையில்:** $HgO_{(S)} + H_2O_{(l)} + 2e^- \longrightarrow Hg_{(l)} + 2OH^-_{(aq)}$<br>**ஒட்டுமொத்த வினை:** $Zn_{(S)} + HgO_{(S)} \longrightarrow ZnO_{(S)} + Hg_{(l)}$<br>**மின்கலத்தின் emf:** 1.35 V<br>**பயன்கள்:** பேஸ்மேக்கர், மின்னணு கடிகாரம், கேமராக்கள். | ½<br>½<br>½<br>1<br>1<br>½<br>½<br>½ | 5 |
| | **(அல்லது) ஆ) i) தன்வினைவேகமாற்றம் என்றால் என்ன? (3)**<br>வினைவிளை பொருள்களில் ஒன்று வினைவேகமாற்றியாக செயல்படுவது. எ.கா. எத்தில் அசிடேட்டை நீராற்பகுக்கும்போது உருவாகும் அசிட்டிக் அமிலம் தன்வினைவேக மாற்றியாக செயல்படுகிறது. **(அல்லது)**<br>$CH_3COOC_2H_5 + H_2O \longrightarrow CH_3COOH + C_2H_5OH$ | 3<br>1 | |
| | **ii) திரிந்து போதலின் பல்வேறு முறைகள் யாவை? (2)**<br>திரிந்து போதலின் பல்வேறு முறைகள்,<br>(i) மின்பகுளிகளை சேர்த்தல்<br>(ii) மின்முனைக் கவர்ச்சி<br>(iii) எதிரெதிர் மின்சுமை கொண்ட கூழ்மங்களை கலத்தல்<br>(iv) கொதிக்க வைத்தல் | 4 X ½ | 5 |
| 38 | **அ) i) டிரான்ஸ் எஸ்டராக்கல் என்றால் என்ன? (3)**<br>ஒரு ஆல்கஹாலின் எஸ்டரானது, கனிம அமிலங்களின் முன்னிலையில் மற்றொரு ஆல்கஹாலுடன் வினைப்பட்டு இரண்டாம் ஆல்கஹாலின் எஸ்டரை உருவாக்குகிறது. எஸ்டர்களுக்கிடையே நிகழும் இந்த ஆல்கஹால் பகுதி பரிமாற்றமானது, டிரான்ஸ் எஸ்டராக்கல் எனப்படும். **(அல்லது)**<br><br>எத்தில் அசிட்டேட் புரோபைல் ஆல்கஹால் புரோபைல் அசிட்டேட் எத்தில் ஆல்கஹால் | 2<br>3 | 5 |
| | **ii) டையசோ ஆக்கல் வினை பற்றி எழுதுக. (2)**<br><br>அனிலீன் பென்சீன் டையசோனியம் குளோரைடு<br>**(அல்லது)** விளக்கம் மட்டும் | 2<br>1 | |

Prepared by Dr.R.Karthic, PG Assistant (Chemistry), GHSS – Vallipattu

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | **(அல்லது) ஆ) i) கீழ்கண்ட குறைபாட்டிற்கு காரணமான வைட்டமின்களின் பெயர்களை எழுதுக. (3)**<br>**A) ரிக்கட்ஸ்** = வைட்டமின் – D<br>**B) ஸ்கர்வி** = வைட்டமின் – C<br>**C) இரத்தக் கசிவு** = வைட்டமின் – K | 3 x 1 | |
| | **ii) அமில நீக்கிகளின் செயல் யாது? உதாரணம் தருக. (2)**<br>வயிற்றில் அமிலத்தன்மையை உருவாக்கும் அமிலத்தை நடுநிலையாக்குகின்றன.<br>**பயன்கள்**: நெஞ்சு மற்றும் தொண்டை பகுதியில் ஏற்படும் எரிச்சல் உணர்வை நீக்குகின்றன.<br>**எ.கா.** மெக்னீசியா பால்மம் **(அல்லது)** ஒரு சரியான உதாரணம் | 1<br><br>1 | |

www.Padasalai.Net